DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES,
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56

| **Spl S.CNo.** | **17/2022 (CC No.3/2018)** | Deposition of | **PW. 74** (LW. 174) |
|---|---|---|---|
| Name | Tr.Anandakumar | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 21.11.2025.

**1 முதல் 5 வரையிலான எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 2.45 P.M**

நான் தற்போது கோயம்புத்தூர் தீவிரவாத தடுப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 24.11.2017ந் தேதி கோயம்புத்தூர் சிறப்பு புலனாய்வு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த போது கோயம்புத்தூர் சிறப்பு புலனாய்வு பிரிவு குற்ற எண் 1/2016 இதச பிரிவு 302, 153ஏ, 120 பி மற்றும் பிரிவுகள் 16, 18 சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் 1967 வழக்கில் என்னை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்து சென்னை குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை கூடுதல் காவல் இயக்குநர் அவர்களின் குறிப்பாணை எண் C.No.C1/666/16405/2016 நாள் 24.11.2017 ன் பேரில் இவ்வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். அந்த செயலானை அதசா ஆ 307 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.11.2017ந் தேதி இவ்வழக்கில் முதல் புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்பபட்ட

எதிரி அபுதாகீர் மற்றும் இறந்த சசிகுமார் ஆகியோரின் கைபேசிகளின் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் 65 பி சான்றிதழ் ஆகியவை Incognito Forensic Foundation Lab, Bangalore கிடைக்கப்பெற்றது. 3 Reports received from Incognito Forensic Foundation Lab, Bangalore along with 3 65 B Certificates and 3 CDs and 1 pen drive are marked as Ex.P. **308 series** (26 sheets). அன்றைய தினம் மேற்படி அறிக்கைகள் வழங்கிய சாட்சி சந்தோஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 2.12.2017ந் தேதி இவ்வழக்கில் பாதுகாப்பு பெற்ற சாட்சிகள் 5 நபர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.12.2017 அன்று எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி என்னுடைய தனி படையுடன் பொள்ளாச்சி சென்று அங்கு வடக்கிபாளையம் பிரிவில் நின்றிருந்த இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி முபாரக் என்பவரை தகவலாளி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரித்தேன் எதிரியானவர் சசிகுமார் கொலை வழக்கில் தான் சம்பந்தப்பட்டுள்ளேன் என்று கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அன்றைய தினம் 16.30 மணிக்கு எதிரியின் குற்றத்தை கூறி கைது செய்தேன். எதிரியின் கைது குறித்து கைது குறிப்பாணை தயார் செய்து எதிரியின் மைத்துனர் அப்துல் ஜப்பார் சூளேஸ்வரன் பட்டி, பொள்ளாச்சி என்பவருக்கு தகவல் கொடுத்து வரவழைத்து கைது குறிப்பாணையில் அவரது கையொப்பமும் எதிரியின் கையொப்பமும் பெறப்பட்டது. கைது குறிப்பாணை மற்றும் arrest report Ex.P.309 (2 தாள்கள்). பின்பு எதிரியை விசாரித்து எதிரியுடன்கோயம்புத்துார் சிறப்பு புலனாய்வு பிரிவு அலுவலகத்திற்கு அழைத்து வந்து பதிவேடுகளில்

பதிவு செய்து நிலைய காவலில் வைத்தேன். 26.12.2017ந் தேதி எதிரி முபாரக் என்பவரை கனம சிபிஐ நீதிமன்றத்தில் / மாவட்ட முதன்மை நீதிமன்றம் அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 2.1.2018ந் தேதி எதிரி முபாரக் என்பவரை போலிஸ் காவலில் வைத்து வழக்கு சம்பந்தமான உண்மைகளை அறிய வேண்டி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து 3.1.2018 அன்று அவரை போலிஸ் காவலில் எடுத்து 3 நாட்கள் விசாரிக்கப்பட்டார். 5.1.2018 அன்று காலை 6 மணிக்கு போலிஸ் காவலில் இருந்த எதிரி முபாரக் என்பவரை நிலையத்தில் ஆஜரில் இருந்த சாட்சிகள் சுரேஷ்குமார் மற்றும் செந்தில்குமார் ஆகியோரின் முன்னிலையில் விசாரித்த போது எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அன்றைய தினம் எதிரி முபாரக்கை போலிஸ் காவல் முடித்து மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து போலிஸ் காவலில் மீண்டும் மூன்று நாட்கள் நீட்டித்து உத்தரவு பெற்றேன். 8.1.2018ந்தேதி காலை 9.15 மணிக்கு போலிஸ் காவலில் இருந்த எதிரி முபாரக் என்பவரை சாட்சிகள் சுரேஷ்குமார் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் மீண்டும் விசாரித்த போது அவர் தானாக எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதன்படி எதிரியானவரை நாங்கள் கோயம்புத்துார் சாய்பாபா காலனியில் கே கே புதுார் எம்ஏ பழனிசாமி தெரு, பொன்னுதுரை நாடார் கட்டிடம் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிகப்பு நிற TVS Max 100 R Regn. No TN 39U5290 என்ற இரு சக்கர வாகனத்தை அடையாளம் காட்ட அதனை காலை 11.45 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில்

கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். 8.1.2018 தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசா ஆ 310** (எதிரி தரப்பு வழக்குரைஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) கைப்பற்றுதல் மகசா் **அதசா ஆ 311** ( 1 தாள்). சிகப்பு நிற TVS Max 100 R Regn. No TN 39U5290 என்ற இரு சக்கர வாகனம் **சாபொ 49** ஆகும். அன்றைய தினம் அதே தெருவில் கதவு எண் 92 ஏ என்ற வீட்டிலிருந்து எதிரியானவா் மேற்படி TVS Max 100 R என்ற வாகனத்தின் ஆா்சி புத்தகத்தை மற்றும் sale receipt எடுத்து ஆஜா் செய்தாா். அதனை 12.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசா் **அதசா ஆ 312** . எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் புலானய்வு பிரிவு அலுவலகத்திற்கு வந்தேன். அன்றைய தினம் போலிஸ் காவல் முடித்து எதிரியை மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **அதசா ஆ 313** (எதிரி தரப்பு வழக்குரைஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 17.2.2018ந் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணையினை தேசீய புலனாய்வு முகமைக்கு மாற்ற உத்தரவிட்டு புது டெல்லி மத்திய உள்துறை அமைச்சகத்தின் கடித எண் F No.11011/02/2018/IS-IV (NIA) dated 22.1.2018 ஏற்கனவே எதசா ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, மற்றும் அதனை சாா்ந்த தமிழக அரசின் அரசாணை எண் GO(2D) No.44 Home Department (Police VII) dated 15.2.2018 ஏற்கனவே எதசா ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, அதனை சாா்ந்து கொடுக்கப்பட்ட தமிழக காவல்

துறை இயக்குநர் அவர்களின் குறிப்பாணை RC No.44245/Crime 4 (2) /2017 dated 16.2.2018 **அதசா ஆ 314(1 தாள்)** ஆகும். அதனை சார்ந்து கொடுக்கப்பட்ட சென்னை குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறையின் கூடுதல் காவல் இயக்குநர் அவர்களின் செயல் முறை ஆணை எண் C.No.C6 / 686/16405 /2016 நாள் 17.2.2018 **அதசா ஆ 315** ( 1 தாள்) ஆகும். ஆகிய உத்தரவுகள் கிடைக்கப்பெற்றது. 20.2.2018 அன்று வழக்கில் சாட்சிகள் வேலுசாமி, ரத்தினகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.2.2018ந் தேதி உத்தரவுகளின் பேரில் இவ்வழக்கினை மேல் விசாரணைக்காக தேசீய புலனாய்வு முகமை காவல் கண்காணிப்பாளர் திரு எல் ஆர் குமார் IPS அவர்களிடம் இவ்வழக்கு கோப்புகளையும் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும், சொத்துக்களையும் ஒப்படைத்தேன்.

**முதல் விசாரணை முடிவடைந்த நேரம் 03.44 P.M**

1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2025.11.21 17:04:02 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.